1972 ஆகஸ்ட் 12]

திரு. என். கிட்டப்பா : சில குறிப்பிட்ட இடங்களில் டாக்டர்கள் மருத்துவ மனைக்கு நீண்ட தூரத்திற்கு அப்பால் குடியிருந்து வருவதால் மருத்துவ மனையில் அவசரமாக கவனிக்கப்பட வேண்டிய கேஸ்கள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே மருத்துவ மனைக்கு அருகிலேயே குடியிருக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கூடுமான வரையில் மருத்துவ மனைக்கு அண்மையிலேயே டாக்டர்கள் குடியிருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மருத்துவ மனைக்கு அருகாமையில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் தூரத்தில் இருக்கிறார்கள். மருத்துவ மனைக்கு அருகிலேயே டாக்டர்களுக்கு வீடுகள் அரசாங்கத்தில் கட்டித்தர வேண்டும் என்கிற கொள்கை இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாக நிதிவசதிக் குறைவினால் அந்தக் கொள்கையை பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. நிதிவசதி பெருகப் பெருக வீடுகள் கட்டப்படும்—மருத்துவ மனைகளும், டாக்டர்களும் நெருங்கி வரும்படிச் செய்ய முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Television Unit for Medical College in City.

* 92 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to set up Closed Circuit Television set in the City Medical College to improve training and educational methods; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை அரசு பொது மருத்துவ மனையில் குறிப்பிட்ட ஒரு தொலைவிற்குள் செயல்படக்கூடிய தொலைக் காட்சிப் படப் பிரிவு (closed circuit Television Unit) ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டு, மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு ஒன்று அரசுக்கு வந்துள்ளது. இது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972-73-ம் ஆண்டு நிறைவேற்றப்படும். இந்தத் தொலைக் காட்சிப் படப்பிரிவை அமைப்பதன் மூலம், அறுவை சிகிச்சைக் கூடத்தில் செய்யப்படும் அறுவை சிகிச்சையின் தொழில் நுட்ப உத்திகள், விவரங்கள் முழுவதையும் தொலைக்காட்சிப் படத்திரையில் தெளிவாகக் காண முடியும். அறுவை சிகிச்சைக் கூடத்திலிருந்து தொலைவில் உள்ள விரிவுரை நடைபெறும் அறையில் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் கூறும் விளக்கங்களைத் தெளிவாகக் கேட்க இயலும்.